



# ஞானச்சுடர்

## மலர்

பங்குனி 1999








வெளியீடு

**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குறள் வழி

" பரிந்து ஓம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்
வேள்வி தலைப் படாதார். " [ தோம்பி

பொருள்:-

விருந்தோம்பலில் ஈடுபடாதார் பொருளை இழந்தபின் வருந்துவர்.

ஸ்ரீ

### அருணாசலசிவ அக்ஷர மணமாலை

நூல்

அருணாசலசிவ அருணாசலசிவ
அருணாசலசிவ அருணாசலசிவ!

61) நைந்தழி கனியா னலனிலை பதத்தி
னாடியுட் கொள்நல மருணாசலா (அ)

62) நொந்திடா துன்றனைத் தந்தெனைக் கொண்டிலை
யந்தக னீயெனக் கருணாசலா (அ)

63) நோக்கியே கருதிமெய் தாக்கியே பக்குவ
மாக்கிநீ யாண்டரு ளருணாசலா (அ)

64) பற்றிமால் விடந்தலை யுற்றிறு முனமருள்
பற்றிட வருள்புரி யருணாசலா (அ)

65) பார்த்தருண் மாலறப் பார்த்திலை யெனினருள்
பாருனக் கார்சொல்வ ரருணாசலா (அ)

[தொடரும்.........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/வண் நாவலர் மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 | சுடர் - 15

1999 பங்குனி

## பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1) | கையில் தவழும் கருவிகள் போதிப்பது என்ன? | 1 - 2 |
| 2) | நோய் தீர்க்கும் அறுசுவை உணவுகள் | 3 - 4 |
| 3) | மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள் | 5 - 7 |
| 4) | வேல் உண்டே துணை | 8 - 10 |
| 5) | திருமகன் கருணை | 11 - 16 |
| 6) | நாலு யுகங்களிலும் வாழ்ந்த மனிதர்கள் பற்றிய வரலாறு | 17 - 18 |
| 7) | கல்வி உன்னைக் காக்கும் | 19 - 21 |
| 8) | சிந்தனைத் துளிகள் | 22 - 24 |
| 9) | சந்நிதியான் | 25 - 28 |
| | மாணவர் பக்கம் | |
| 10) | யாழ்ப்பாண மன்னர்கால இலக்கியங்கள் | 29 - 30 |
| 11) | Easy Way to Learn English (Part-15) | 31 - 32 |

அன்பளிப்பு : மலர் ஒன்று 30/- ரூபா

வருட சந்தா தபால் செலவுடன் 385/- ரூபா.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர்.

அச்சுப் பதிப்பு : அச்சகம் - சந்நிதியான் ஆச்சிரமம்
தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து!

வாழ்த்துதும் வாழ்த்துதும் ஞான பானுபோல்
நீள்ஒளி பரப்பி நிர்மலன் சந்நிதி
சார்திறன் உடனே சைவ சமயச்
சீர்மிகும் பண்புகள் சீலரின் இயல்புகள்
நயம்பட விளக்கி நல்லோர் உளங்கொளும்
பண்புகள் தேர்ந்து பரவச மாகி
நண்பரும் நயந்திட நயம்பல காட்டத்
தகவொடு தவழும் ஞானச் சுடரே!
அறிவுரை நுண்கலை ஆன்றோர் ஆக்கம்
செறிவுறுஞ் சைவத் தத்துவச் சிறப்புக்கள்
கல்விச் சிறாரையும் கவர்தர விரித்துச்
செல்வச் சந்நிதி அருள்ஒளி தூண்டப்
பல்லோர் போற்றும் பாங்குடன் விரைவில்
உளங் கொளும் உவப்பு மீதூர
வளங்கொளும் வார இதழாய் மலரவே.

ஆ. கதிர்காமத்தம்பி
வல்வெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/வண் நாவலர் மகா வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்

# “ஞானச்சுடர்”
## மாசி மாத வெளியீடு

**வெளியீட்டுரை :**

1999ஆம் ஆண்டு மாசிமாத மலருக்கான வெளியீட்டுரையை சமாதான நீதிபதி திரு. க. செல்வரட்ணம் அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர் தனது உரையில் இந்தியாவில் இருந்து வெளிவருகின்ற சஞ்சிகைகளுக்கு சமமான தரத்தில் இந்தச் சுடரும் வெளிவந்து கொண்டிருக்கிறது. எனவும் எமது பிரதேசத்தில் இருந்து வெளிவருகின்ற இந்த மலர், ஒவ்வொரு சைவமக்கள் வீட்டிலும் இருக்க வேண்டியது அவசியம் "என குறிப்பிட்டார். அத்துடன் இந்த ஆலயத்தில் தூய்மையுடன் ஆரம்பிக்கின்ற பணிகள் வெற்றியுடன் தொடர்ந்து நடைபெற்று வருவது வழக்கம் எனவும் அடியார்களுக்கு எடுத்துக் கூறினார்.

**மதிப்பீட்டுரை:**

யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் திரு. சிவலிங்கராசா அவர்கள் இந்த மலருக்கான மதிப்பீட்டுரையை மேற்கொண்டார்கள். எமது வரலாற்றில் முக்கியமாக மக்களின் சமய வரலாற்றில் அச்சியந்திரத்தின் அறிமுகமும் அதனை எமது சமய மக்கள் சொந்தமாக பயன்படுத்தத் தொடங்கியதும் ஒரு முக்கியமான சம்பவமாக காணப்படுவதை பல உதாரணங்கள் மூலம் எடுத்துக் காட்டிய விரிவுரையாளர் அவர்கள் இந்த மலரும் சொந்தமான அச்சியந்திரத்தின் மூலம் வெளிவந்து கொண்டிருப்பதன் சிறப்பை எடுத்து விளக்கினார்கள்.

எமது பிரதேசத்தில் இருந்து எமது பிரதேச மக்களின் ஆத்மீகப் பசிக்கு உணவாக இந்த மலர் வெளிவந்து கொண்டிருப்பதையும் திரு. சிவலிங்கராசா அவர்கள் எடுத்துக் கூறினார்கள். பலவகையினருக்கும், பயன்படுகின்ற வகையில் திருப்தியாக சுடர் வெளிவந்து கொண்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டியதுடன், சமூகத்தின் இலக்கிய வளர்ச்சி, மகாபாரத கதைகள் போன்ற பயனுள்ள விடயங்கள் இதில் உள்ளடங்கி இருப்பதையும் கருத்தில் கொள்ளவேண்டி உள்ளது எனக்குறிப்பிட்டார்.

எமது பிரதேசத்தில் வாழ்ந்த பலஅடியார்கள், சித்தர்கள் போன்றவர்களின் வரலாறுகளையும் தேடிப்பெற்று சுடரில் வெளியிடலாம் என்பது போன்ற ஆலோசனைகளையும், பேரவையினருக்கும் வெளியிட்டு தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி மாத சிறப்புப் பிரதி பெறுவோர்

திருமதி. தேவராசா

( தூதாவளை, கரணவாய் தெற்கு. )

திரு. பொ. ஞானப்பிரகாசம்

( சித்தம்பாதி, கரணவாய் தெற்கு. )

திரு. சி. சரவணப்பெருமாள்

( மாணிக்கவளவு, கரணவாய் தெற்கு. )

திரு. ச. சட்டநாதக்குருக்கள்

( வேதாரணீஸ்வரம், கரணவாய் கிழக்கு. )

திரு. K. ராமநாதன்

( சத்திரங்கை, கம்பர்மலை. )

திரு. சி. ஆனந்தராசா

( இளை ஆசிரியர், உடுப்பிட்டி. )

திரு. கு. ரவீந்திரன்

( ஆசிரியர், யா / வீரகத்திப்பிள்ளை மகா வித். தொண்டைமானாறு. )

திரு. ஆ. வேலாயுதம்

( உலக்கை ஓடை, கம்பர்மலை. )

பொ. அருட்செல்வம்

( இணுவில் தெற்கு, இணுவில். )

சு. சுந்தரலிங்கம்

( வேவிற்பிள்ளையார் கோவிலடி, வல்வெட்டி. )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையில் தவழும் கருவிகள் போதிப்பது என்ன?

வாழ்க்கை என்றால் என்ன? என ஒருமுறை சிரித்திரன் சஞ்சிகையில் அதன் வாசகர் ஒருவர் கேள்வி பதில் பகுதியில் கேட்டிருந்தார். இக்கேள்விக்குப் பதில் கொடுத்த அதன் ஆசிரியர் அமரர் சிவஞான சுந்தரம் (சுந்தர்) பின்வருமாறு கூறியிருந்தார்.

"வாழ்க்கை என்பது இன்னலும் கன்னலும்
பின்னலாகிய மின்னல்"
எனப் பதில் கூறியிருந்தார்.

எமது புராண இதிகாச இலக்கியங்கள் மனித வாழ்வில் இன்னலை நீக்கி இன்பம் பெறுக வேண்டும் என்ற நோக்கில் பல தத்துவங்களைச் சில படிமங்களின் ஊடாகவும் சில வேளைகளில் சில குறியீடுகளின் ஊடாகவும் பிரதிபிம்பப்படுத்தி உள்ளன.

இயற்கை வழிபாடு முக்கியத்துவம் குறைந்து விக்கிரக வழிபாடு இந்து மதத்தில் ஆரம்பமானபோது இந்துக் கடவுளர்க்கும் உருவம் கொடுத்த நமது முன்னோர்கள் முழுமுதற் கடவுளாகிய சிவனின் கையில் சூலாயுதத்தைக் கொடுத்தார்கள். தமிழ்க் குமரக்கடவுள் முருகனின் கையில் வேலாயுதத்தைக் கொடுத்தார்கள். காத்தற் கடவுளாகிய மகா விஷ்ணுவின் கையில் சங்கு, சக்கர ஆயுதத்தைக் கொடுத்தார்கள். இராம பிரானின் கையில் அம்பையும், வில்லையும் கொடுத்த இந்துக்கள் காவல் தெய்வமாகிய ஆஞ்சநேயரின் கையில் கதாயுதத்தைக் கொடுத்தார்கள். சிங்கம்போல் முகம் கொண்ட யாழிமீது சிறப்புடன் அமர்ந்திருக்கும் துர்க்கையின் கையில் வாளைக் கொடுத்த நம் முன்னோர்கள். போர்க் கோலம் பூண்ட காளியின் கையில் கத்தியைக் கொடுத்தார்கள். நரகாசுரன் வதையும், சூரபத்மன் வதையும், மகுடாசுரன் வதையும் எமக்கு எடுத்தியம்பும் தத்துவம் தான் என்ன? இடுக்கண் புரிவோர் வதைபட இன்னல் பட்டோர் விடுதலை பெற்ற உண்மையையே எடுத்தியம்புகின்றன. இன்னல் களைவதையே இலட்சியமாகக் கொண்ட பாட்டுடைத்தலைவனைப் பாத்திரங்களாகப் படைத்த புராணமும் இதிகாசமும் புகட்டும் புத்திமதிதான் என்ன? கந்தபுராணத்தில் முருகனும், இராமாயணத்தில் இராமரும் மகாபாரதத்தில் அருச்சுனனும் துக்க நிவர்த்தியின் குறியீடுகளாகப் போற்றப்படுகிறார்கள். மக்களுக்கு இன்பம் தரும் படிமங்களாகப் பாராட்டப்படுகிறார்கள்.

★ முறை சரியாக இருந்தால் முடிவும் சரியாகத்தான் இருக்கும். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைப் போலவே இசையும் மக்களுக்கு இன்பம் தருவதேயாகும். இசையால் வசமாகா இதயம் எது? என்பர். '' தமிழோடு இசைபாட மறந்தறியேன் '' என்றார் அப்பர் சுவாமிகள்; கண்ணனின் கையில் தவழும் புல்லாங்குழல் அந்த புருசோத்தமனின் புகழைப் பாடுகின்றது. காம்போதி இராகத்தில் சாமகீதம் பாடி கைலைநாதரை இராவணன் மயக்கியதாக ஒரு ஐதீகக் கதை கூறப்படுகின்றது. கலைமகள் கைப் பொருளான வீணையும், நற்பொருளை நயம்பட உரைத்த நாரதர் கையில் தவழும் தம்புராவையும் நமது முன்னோர்கள் இசை இன்பத்தின் வெளிப் பாட்டினை உணர்த்தும் குறியீடுகளாகவே காட்டியுள்ளனர். சிவபெரு மானுக்குப் பிடித்த வாத்தியக்கருவி உடுக்கை என்பர் சிலர். அந்த ஆடல் வல்லான் ஆடும் ருத்ரதாண்டவத்திற்கு நந்திதேவர் மத்தளம் வாசித்ததாக ஒரு செய்தி சொல்லப்படுகின்றது. இங்கும் கண்ணுக்கு விருந்தாகும் நடனக் கலையும் காதுக்கு இனிய இசைக்கலையும் மனித வாழ்வின் இன்பத்தையே சுட்டி நிற்கின்றன.

ஆகவே தெய்வங்கள் ஏந்தி நிற்கும் போர்க் கருவிகளும் இசைக் கருவிகளும் மனித குலத்தின் வாழ்வியலை மையமாகக் கொண்டவையே ஆகும். இடையூறுகளை நீக்கி இன்னல்களைப் "போக்கி இன்ப வாழ்வை நோக்கிய பாதையின் கலங்கரை விளக்கமாகவே இவை விளங்குகின்றன. விக்கிரக வழிபாட்டின் தாற்பரியமும் உருவ வழிபாட்டின் உண்மைத் தன்மைகளும் மானிடர்களின் மாண்புகளையும் மேன்மைகளையும் மேம் படுத்தும் நோக்கமுடையவையே ஆகும். தெய்வங்கள் கைகளில் தவழும் போர்க்கருவிகளும் இசைக்கருவிகளும் இன்ப வாழ்வின் குறியீடுகளே ஆகும். என்பதில் சந்தேகமேயில்லை.

பொன். பூலோகசிங்கம்
சட்டத்தரணியும் பிரசித்தநொத்தாரிசும்

இன்னல்கள் நேர்கின்றன; ஆனால் அவை என்றென்றும் நிலைத்திராது. பாலத்தினடியில் ஓடும் நீரைப்போல் அவை ஓடி மறைந்து விடும்.

ஸ்ரீ சாரதாதேவி

அறிவின் முதல் பாடம் செல்வத்தை வெறுப்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய் தீர்க்கும் அறுசுவை உணவு

நோய் வருமுன் காப்போம். அதாவது, நோய்கள் இறைவனால் கொடுக்கப்படும் ஒன்றல்ல. சிந்தியாது கவலையீனம் என்பதால் உண்டாவது நோய். ஆரம்பத்தில் சரீரத்தில் ஏதும் மாற்றங்கள் இருப்பின் அதை நன்கு அவதானித்து, அதற்குப் பரிகாரம் தேடுவதே சிறந்த பண்பாகும்.

தினசரி நேரம் தவறாது நல்ல அறுசுவையான உணவைச் சாப்பிட்டு வந்தால் நோய்க்கு ஆளாகாமல் வாழலாம். அரைப்பங்கு உணவும் 1/4 பங்கு நீரும் தவறாது உட்கொண்டால் எந்த விதமான நோயும் இல்லை என்று அறியலாம்.

நீண்ட ஆயுளுடன் வாழ மனிதர் எல்லோருக்கும் விருப்பம்தான். போதிய உணவு இல்லாமையே நோய்க்கு காரணியாகும். சைவ உணவே ஒரு மனிதனின் ஆயுளைப் பெலப்படுத்தும். உதாரணமாக சோற்றில் (காபோவைதிரேற்), பருப்பு, பயறு (புரதம்), இருப்பதினால் இதை ஒழுங்காக உட்கொண்டாலே நோயில்லாமல் வாழலாம். பொதுவாக மனித வளர்ச்சி தேகாரோக்கியத்துக்கு நாளாந்தம் மூன்று முறையே பருப்பு, கீரைவகை, கரட், போஞ்சி, பயற்றங்காய், வெண்டிக்காய், பூசினி, லீக்ஸ், புடலங்காய் போன்றவற்றை சமையல் செய்து உட்கொண்டால் வாயு, அல்சர், நரம்புச்சோர்வு, இரத்தமின்மை, இருதயசுத்தி நல்ல மாதிரி நடைபெறும். நாள் தோறும் 5 செம்பரத்தம் பூவை பச்சையாக சாப்பிட்டால் இருதய சுத்தி நடைபெறும். விசேடமாக அல்சர் (வயிற்றுப் புண்பாடு) இவைகளுக்கு வாழைப்பொத்தி, இருவாத்தி, அகத்தியிலை சுண்டிச் சாப்பிட்டால் நோயிலிருந்து தப்பலாம். கறணை மூலவருத்தத் தீர்க்கும். சாம்பல் வாழைக்காய் (பொஸ்பரசு) உடல் வளர்ச்சிக்கு உதவும்.

இருமல், சளி போன்றவற்றிற்கு தூதுவளைசம்பல், மொசுமொசுக்கைசம்பல் செய்து சாப்பிட்டால் இந்நோயிலிருந்து தப்பலாம். சுத்தம் சுகம் தரும், தூய்மையான வாழ்வு நீராடல், எண்ணெய் தேய்த்தல் இதுவும் தலைசிறந்தது. மஞ்சள், உள்ளி, பெருங்காயம், வெந்தயம் தினசரி உணவில் சேர்த்தால் புற்றுநோய், எயிட்ஸ் போன்ற நோய்கள் வராமல் தடுக்கலாம். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" செல்வம் தேடலாம், நோயை தேடக்கூடாது. அயராது உழைப்பவன் முதலில் தன் உடலைக் கவனிக்க வேண்டும் பின்புதான் பொருளைத் தேடவேண்டும். வயிற்றைக் கட்டி சம்பாதிக்கக் கூடாது. உழைவிற்கு நன்றாக செலவழிக்க வேண்டும்.

---

★ இனிய சொற்கள் வலிமை நெஞ்சை உருக வைக்கும். ★

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப்பு; புளிப்பு; இனிப்பு; கார்ப்பு; உவற்பு; துவற்பு ஆகிய இந்த அறுசுவை உணவு வகையில் சந்நிதியான் ஆச்சிரமம் இதைக் கடைப்பிடிப்பது பராட்ட வேண்டியது ஒரு விடயமே. அங்கு பரிமாறும் உணவுவகை நோய் தீர்க்கும் அருமருந்தாக இருக்கிறதை அங்கே அவதானித்தேன். ஆலயத்தில் இருக்கும் அடியார்கள் நோய் இல்லாமல் இருப்பதற்கு ஆலயத்தின் விபூதி. (பழரச) தீர்த்தம், ஆச்சிரம சைவ சத்துணவு இதனால் நோய் வராமல் இருக்கிறார்கள். இது முருகனின் ஒரு திருவருள்.

நோய்களை கவனியாமல் நோய் முத்தி மரணப்படுக்கையில் இருப்பவர் தாம் விட்ட பிழைகளை உணருகிறார்கள். அந்த நேரம்தான் இறைவனை திட்டுகிறார்கள் இது தவறு. இறைவன் காப்பவரே அல்லாமல் வதைப்பவரல்ல.

கரவெட்டியில் ஒரு முருகபக்தர் '' இளையப்பா '' என்பவர் இருந்தார். 50 வருடங்களுக்கு முன்பு சைவ உணவு அருந்துபவர், அவருக்கு தோல் புரை வியாதி வந்தது. வீட்டில் உள்ளவர்கள் இது தொற்று நோய் ஆஸ்பத்திரிக்கு போங்கோ என்று கூறினார்கள். அவர் அதைப் பொருட்படுத்தாமல் '' சந்நிதிமுருகன் இருக்க யாரிடம் போவது என்று ஒரே பதில் கூறிவிட்டார். அவர் தனது ஒற்றைமாட்டுவண்டியில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் சந்நிதி செல்வார். அங்கே ஆற்றிலே நீராடி முருகனின் விபூதி, சந்தணம் தேகம் முழுவதும் பூசுவார். உணவில் முருங்கைக்கீரை, வல்லாரை, பொன்னாங்காணி, வேப்பம்துளிர், பாவற்காய், காளான் சேர்ப்பார் ( அலக்சாண்டர் பிளேமின் '' பென்சிலின் '' மருந்தை காளானில் இருந்து கண்டுபிடித்தார். நாவற்கொட்டையிலும் பென்சிலின் தன்மை இருக்கிறது. ) நாள்போகப்போக உடலில் இருந்த சொறி, கடி, தழும்புகள் தணிந்து சுகமானார். இதை அறிந்த சுற்றத்தார் வியப்படைந்தார்கள். இது ஒரு உண்மைச் சம்பவம் '' கடவுளை நம்பினார் கைவிடப்படார். ''

Dr. V. பாலகிருஷ்ணன்
'' முருந்தன் வைத்தியசாலை ''
அச்சுவேலி

★ தியாகத்திலும் பார்க்க பணிவு மிகவும் பெரியது. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

### ( மகாபாரதத்திலிருந்து )

# தீமையில் நன்மை

உலகில் நல்லவர்கள் எல்லோரும் மற்றவர்களை எளிதில் நம்பி விடுவார்கள். ஆனால் தீயவர்கள் சுலபமாகப் பிறரை நம்புவதில்லை. இதன் காரணம் யாது? நல்லியல்புடையோர், தம்மைப் போலப் பிறரையும் நல்லவர்கள் என்றே கருதிக் கொள்வார்கள். தீயவர்கள் மற்றவர்களையும் தம்மைப் போலத்தீயவர்கள் என்றே கருதிக் கொள்வார்கள். இதனால் தான் நல்லியல்புகளின் உறைவிடமான தருமர், தீயவனாகிய துரியோதனன் உரைத்த பொய்யுரைகளை மெய்யென எண்ணியவராய். மற்றைய சோதரர்களுடன், மாளிகை வந்தடைந்தார். அரண்மனையில் பீமன் இல்லை என்பதனை உணர்ந்து கொண்டவராய், அன்னை குந்தி தேவியின் இருப்பிடம் ஏகி பீமனை விசாரித்தார் அன்னையிடம். அப்போது குந்திதேவி, பதட்டமடைந்தவளாய் " மகனே பீமன் உங்களுடன் தானே கங்கைக் கரைக்கு வந்தான், அவன் மீண்டும் இங்கு வரவில்லை. நான் அவனைக் காணவில்லையே " என்று உரைசெய்தார். பதட்டமடைந்த, தருமர்முதலானோர் பீமனை எங்கும் தேடலுற்றனர். எங்கும் காணதவராய், அன்னையிடமே மீண்டும் வந்து கூறிக்கவலையுற்றவராய் அமர்ந்திருந்தனர். இதனால் கவலை கொண்டவளாகிய குந்திதேவி, விதுரரை அழைத்து வரச்செய்தாள். விதுரர் வந்ததும், நடந்தவற்றை விளக்கி " விதுரரே, பஞ்சபாண்டவர்களுள், பலசாலியாக விளங்கும் பீமனைத் துரியோதனனுக்குப் பிடிப்பதில்லை, அவன்பால் துரியோதனன் கடும் வெறுப்புற்றவனாக இருக்கிறான். இதனால் ஏதாவது விபரீதமான செயல்களைப் பீமனுக்குத் துரியோதனன் செய்திருப்பானோ என்று எண்ணத்தோன்றுகிறது. இப்போது யாது செய்வது ? என்று வினாவி நின்றாள். அப்போது விதுரர் " அம்மணி தாங்கள் கலங்கவேண்டாம். வியாசமகரிஷியின் ஆசியுரைகள் வீண்போகாது. அவர் பஞ்சபாண்டவர்கள் நீடித்த ஆயுளுடனும், புகழ்பெற்றும் வாழ்வார்கள் என்று ஆசிர்வதித்துள்ளார். துரியோதனன் தீச்செயல்கள் புரியக்கூடியவன்தான் ஆனாலும் அதனின்றும் பீமன்மீண்டு வருவான் அத்துடன் அம்மணி உங்கள் மனக்கருத்துக்களை வெளியிடாது இரகசியமாக துரியோதனன் அறியாத வகையில் இருந்து செயல்படுங்கள். ஏனெனில் இக்கருத்துக்களைத் துரியோதனன் அறிவானாகில் மற்றைய பாண்டவர்கட்கும் ஏதும்

கெடுதல்களைச் செய்ய முயல்வான் நான் பீமனை இரகசியமான முறையில் தேடும் முயற்சியில் ஈடுபடுகிறேன். பதட்டமடையாது அமைதியுடன் தாங்கள் எல்லோரும் இருக்கவேண்டும்'' என்று ஆறுதல்கூறி, விதுரர் தன் இருப்பிடம் ஏகினார். இதனால்க் குந்திதேவி, மனக்கவலை சிறிது குறைந்தவளாய் இருந்தாள்.

இவ்வேளையில்த் துரியோதனனால்க் கங்கையில்த் தள்ளப்பட்ட பீமன், கங்கையின் ஆழத்தில் நாகர்கள் வசிக்கும் நாகலோகம் போய்ச் சேர்ந்தான். அங்கே நாகர்கள் அவனைக்கண்டு அவனது கட்டுக்களை அறுத்தெறிந்து அவன் பஞ்சபாண்டவர்களுள் ஒருவனான பீமன் என்பதனைக்கண்டு மகிழ்வுற்றவராய், பீமனை உணவுமுதலியன கொடுத்து உபசரித்தனர். அதன்பின்னர் ரசபானம் ஒன்றையும் அவனுக்குப் பருகக் கொடுத்து, அவனை இளைப்பாறச்செய்து, தூங்கும்படி கேட்டுக்கொண்டனர். பீமனும் தூங்கத் தொடங்கித் தொடர்ந்து எட்டுநாட்கள் வரை துயில்கொண்டு களைப்பு நீங்கியவனாய்க் கண்விழித்தான். அப்போது நாகர்கள் அவனை நன்கு நீராட்டி உணவுதந்து உபசரித்து '' ஐயனே தங்களைக் காணாது, தங்கள் தாயும், சகோதரர்களும் கவலையுற்றிருக்கின்றனர். எனவே விரைந்து சென்று அவர்களை மகிழ்விப்பீராக, அத்துடன், தாங்கள் அருந்திய ரசபானத்தின் மகிமையால் தங்கள் உடலில் பதினாயிரம் யானைகளின் பலம் சேர்ந்துள்ளது. தங்களை ஒருவரும் வெற்றிகொள்ள முடியாது. எனவே மகிழ்வுடன் விரைந்து செல்வீர்களாக '' என்று பீமனை அனுப்பிவைத்தனர். பீமனும் விரைந்து சென்று அன்னையின் மாளிகையை வந்தடைந்தான். அன்னையின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். சோதரர்களைத் தழுவித் தன் மகிழ்வை வெளிப்படுத்தினான் தனக்கு நடந்தவற்றை எல்லாம் விளக்கமாகச் சொல்லி நின்றான். இதனால் மனதில் நிம்மதி பெற்றவரான குந்திதேவியும் தருமர் முதலானோரும், பீமனை என்றும் கண்காணித்து வந்தனர் இவ்வேளை பீமன் மீண்டு வந்தசெய்தி அறிந்த துரியோதனன், மனக் கலக்கமும் பொறாமையும் மிக்கவனாயினான்.

## குரு துரோணாச்சாரியார்

தனது புதல்வர்கட்கும், சகோதரனான பாண்டுவின் புதல்வர்கட்கும், ''கிருபாச்சாரியார்'' எனும் குருவின்மூலம் வித்தைகள் பலவற்றையும் கற்பித்துத்தர ஏற்பாடுகள் செய்திருந்தான் மன்னன் திருதராஷ்டிரன். பிதாமகர் பீஷ்மர் தனது பேரக்குழந்தைகட்கு இன்னும் மேன்மை பெற்று விளங்கும் வில்லாசிரியர் ஒருவர்மூலம் வித்தைகள் பயிற்றுவிக்க விரும்பினார். இதன் பிரகாரம், ஆராய்ந்தறிந்து '' துரோணாச்சாரியார் '' எனும் சிறந்ததோர் ஆசான் இருப்பதாக அறிந்து, அவரைத் தன் மாளிகைக்கு அழைத்துவரும் முயற்சியில் ஈடுபடலானார். இவ்வேளையில் துரோணாச்சாரியார் சந்தர்ப்பவசத்தால் அஸ்தினாபுரம் வந்து சேர்ந்தார்.

வலிமை மன உறுதியிலிருந்தே உண்டாவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரத்துவாஜ முனிவரின் புதல்வராகிய துரோணாச்சாரியார், இளமைக்காலத்தில் தன் தந்தையிடமே கல்வி கற்றுவந்தார். அவ்வேளையில் வடபாஞ்சால நாட்டு மன்னன் மைந்தனாகிய துருபதனும் பரத்துவாஜ முனிவரிடம் குருகுலவாசம் செய்து கல்விகற்று வந்தான். இதனால் துரோணரும், துருபதனும் நண்பர்களாகப் பழகி வந்தனர். நாளடைவில் இவர்களின் நட்பு மென்மேலும் வளர்ந்தது. நட்பின் பலத்தால் பாஞ்சால மன்னன் புதல்வனாகிய துருபதன் முனிவர் புதல்வனாகிய துரோணருக்கு ஓர் வாக்குறுதியை அளித்துத் தன்கல்வி முடிந்தகாலை தன்நாட்டுக்கு ஏகினான் "நான் இளவரசனாக இருக்கிறேன். எனது தந்தை என்னிடம் ஆட்சியை ஒப்படைக்கும் காலத்தில் நாட்டில் பாதியை உனக்குத் தருவேன்" என்பதாக அந்த வாக்குறுதி அமைந்திருந்தது. இளவரசன் நாடு திரும்பினான், கல்வி கற்றுமுடிந்த துரோணாச்சாரியார் "கிருபி" என்னும் பெண்ணை விவாகம் செய்து வாழ்ந்து வரலாயினர். இதன் பயனாய்த் துரோணாச்சாரியாருக்கு ஓர் ஆண்மகவு பிறந்தது. அக்குழந்தைக்கு "அசுவத்தாமா" எனப் பெயர்சூட்டி வளர்த்துவரலாயினர். இவ்வேளையில் துரோணர் கொடிய வறுமையால் பீடிக்கப்பட்டார். இதனால்க் கவலை கொண்டவராய்த் தனது நண்பனாக விளங்கிய துருபதன் குருகுல வாசத்தின் போது உரைத்த வாக்குறுதியை எண்ணித் துருபதமன்னனின் நாட்டை நோக்கித், தன்மனைவி, பிள்ளையுடன் செல்லலானார்

மன்னனின் அரண்மனையை அடைந்து தன்னை யார் என்பதை மன்னனுக்குத் தெரிவித்து நின்றார். மெலிந்த உருவமும், ஏழ்மைக் கோலமும் கொண்டவராய் இருந்த துரோணரை, மன்னன் என்ற செருக்கும் ஆணவமும் கொண்டவனாய் விளங்கிய துருபதன், எள்ளிநகையாடினான். "நான் உனது நண்பனா நன்று நன்று" எனப்பரிகசித்தான். இதனால் மனவருத்தமுற்ற துரோணர் இளமைக்காலத்தில் நடந்தவற்றையும், மன்னன் தனக்கு அளித்த வாக்குறுதியையும் நினைவு கூரச் செய்தார். ஆனால் துருபதனோ அவரின் உரைகளைச் செவிமடுக்கவில்லை. "விரும்பின் சில தினங்கள் மாளிகையில் தங்கியிருந்து நல்லுணவு உண்டு மகிழ்ந்து ஏகுமாறு செப்பலுற்றான், இதனால் பெரும் அவமதிப்புக்குள்ளான துரோணர், மிகச்சீற்றமடைந்தவராய் தனது மனதில் ஓர் சபதம் பூண்டவராய் அவ்விடத்து நின்றும் அக்கணமே வெளியேறினார். எங்கு செல்வது என்று சிந்தித்தவராய் நடந்து கொண்டிருக்கும் வேளையில், தமது மைத்துனராகிய கிருபாச்சாரியாரிடம் செல்வது எனத் தீர்மானித்தார். அவ்வேளையில் கிருபாச்சாரியார் அஸ்தினாபுரியில் பாண்டவர், கௌரவர் முதலானோருக்கு ஆசானாக இருப்பதனை அறிந்து, அஸ்தினாபுரம் வந்தடைந்தார்.

செந்தமிழ்சுரபி
சிவத்திரு வ. குமாரசாமிஐயர்
நூலகர்
வலிவடக்கு பிரதேச சபை.
காங்கேசன்துறை
( மல்லாகம் )

⋆ சிக்கனம் இல்லாவிட்டால் யாரும் செல்வராக இருக்க முடியாது ⋆

# வேல் உண்டே துணை

சங்க காலப் புலவர்களில் ஒருவராக நக்கீரர் பெருமான் பேற்றப் படுகிறார். இவர் சிறந்த முருக பக்தராகத் திகழ்ந்தார். இவர் அருளிய பிரபந்தங்கள் பத்து ஆகும்.

1) கைலைபாதி காளத்திபாதி
2) திருஈங்கோய் மலை எழுபது
3) திருவலஞ்சுலி மும்மணிக் [கோவை
4) திருஎழுக்கூற்றிருக்கை
5) பெருந்தேவபாணி
6) கோபப்பிரசாதம்
7) கார்எட்டு
8) போற்றித்திருக்கலி வெண்பா
9) திருமுருகாற்றுப்படை
10) திருக்கண்ணப்பதேவர் திருமறம்

என்பன அவை ஆகும்.



எல்லா விதமான வினைகளில் இருந்தும் நீங்குவதற்குரிய தோத்திர நூலாக முருக உபாசர்கள் திருமுருகாற்றுப்படையைப் போற்றுகிறார்கள். முருகப்பெருமானிடம் அடியவர்களை ஆற்றுப்படுத்தும் நூல் திருமுருகாற்றுப்படை ஆகும். அருள் கலந்த இனிய இலக்கியமாகிய திருமுருகாற்றுப்படை சாத்திரம், தத்துவம் கலந்த பக்தி நூலாகக் காணப் படுகின்றது. முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளையும் அவரின் திருவடிப் பெருமையையும் திவ்ய பராக்கிரமங்களையும், பரத்துவத்தையும் இப்பாடல் விளக்குகிறது. திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்ச்சோலை ஆகிய ஆறு முருகன் தலங்கள் மீதும் பாடல்களைப் பாடியுள்ளார், இவற்றோடு திருமுருகாற்றுப்படை வெண்பாக்களாகப் பத்துப்பாடல்கள்

★ ஏங்கி நிற்போர் தூங்கிச் சாவார். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரால் பாடப்பெற்றுள்ளன. முருகப்பெருமானின் கையில் இருக்கும் ஞான சக்தியாகிய வேலின் பெருமையை சிறப்பித்துப் பாடியுள்ளார்.

வீரவேல், தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் — வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை.

என்ற பாடல் வேலின் சிறப்பைப் போற்றுகிறது.

திருக்காளத்தியில் இருக்கும் புனித தீர்த்தமாகிய பொன் முகலி ஆற்றில் நீராடி காளத்தி நாதனை வணங்குபவர்களுக்கு எல்லா வினைகளும் தீரும் என்பதை நக்கீரர் அருளிய கைலைபாதி காளத்திபாதி என்ற நூல் விளக்குகிறது. மூர்த்தி, தலம், தீர்த்தம் வழிபட்டால் செய்த வினைகள் அனைத்தும் நீங்கும் என்பதனைப் பின்வரும் பாடல் விளக்குகிறது.

அறியாமலேனும் அறிந்தேனும் செய்து
செறிகின்ற தீவினைகள் எல்லாம் — நெறி நின்று
நன்றாடில் பேசி காளத்தி நாதன் அடிபணிந்து
பொன் முகலியாடுதலும் போம்

கல்லாடதேவ நாயனாரால் அருளப்பெற்ற நூல் திருக்கண்ணப்ப தேவர் திருமறம் ஆகும். முப்பத்தெட்டு அடிகளைக் கொண்ட ஆசிரியப்பா இதுவாகும். வேடுவனாகிய கண்ணப்பன் அன்புருவானவன் என இப்பாடலில் குறிப்பிடுகிறார்.

முக்கண் அப்பனுக்கு ஒரு கணில் உதிரந்
தக்கினத்திடை பீறிதர அக்கணம்
அழுது விழுந்து தொழுது எழுந்து அரற்றிப்
புன்மருந்து ஆற்றப்போகாது என்று
தன்னை மருந்தென்று மலர்க்கண் அப்ப.

எனக்கண்ணப்பனின் அன்புச் செயலை இப்பாடல் முழுவதும் விளக்கிக் கூறுகிறார். வேடுவனாகிய கண்ணப்பனின் பாதார விந்தங்களைப் பணிந்து வணங்கினால் உயிர் நோயாகிய பிறவி நோய் நீங்கி விடும் என்பதைப் பின்வரும் பாடல் வரிகள் விளக்கி நிற்கிறது.

" திருவேட்டுவர்தந் திருவடி கைதொழக் கருவேட்டுழல்
வினைக் காரியம் கெடுமே.

துடிப்பான எண்ணம் சோகித்துப் போகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த நாயனார் திரு இரட்டை மணிமாலை, சிவபெருமான் திரு இரட்டைமணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி ஆகிய மூன்று நூல்களும் கபிலதேவ நாயனாரால் அருளப்பெற்றவை ஆகும். இவர் தனது பாடலில் நாற்பத்தைந்து தலங்களுக்கு மேல் குறிப்பிட்டுள்ளார். விநாயகப் பெருமான் மீது வெண்பாவும் கலித்துறையும் மாறிமாறி வர இருபது பாடல்களைப் பாடியுள்ளார். இந்நூலே மூத்த நாயனார் திரு இரட்டை மணிமாலை ஆகும். விநாயகப் பெருமானை அன்போடு வழிபடுகிறவர்களுக்கு செய்கின்ற காரியங்களில் சித்தி ஏற்படுவதோடு எல்லாப் பேறும் கிடைக்கும் என்பதனைப் பின்வரும் பாடல் தெளிவாக விளக்குகிறது.

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் — உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலாற் கூப்புவர் தங்கை.

மனிதர்களைப் பிடிக்கும் கொடிய வினைகளையெல்லாம் வேரோடு அறுக்க வல்லது விநாயகப் பெருமானின் திருவருள் ஒன்றேயாகும். நம்மிடம் உள்ள உலகியல் பற்றுக்களைக் குறைக்கும் சக்தி விண்ணிற்கும் மண்ணிற்கும் தலைவனாக இருக்கின்ற விநாயகப் பெருமானாலேயே முடியும்.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்கவல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

என்ற பாடல் இவற்றைத் தெளிவாக விளக்குகிறது. கபிலதேவர் சிவபெருமானின் பிட்சாடனர் வடிவத்தில் ஈடுபாடு கொண்டு நூறு வெண்பாக்களைக் கொண்ட அந்தாதி அமைப்பில் பாடிய பாடலே சிவபெருமான் திருவந்தாதி ஆகும். பரணதேவர் சிவபெருமான் திருவந்தாதியும் இளம்பெருமானடிகள் சிவபெருமான் மும்மணிக் கோவையும் பாடியருளினார்கள். அதிராவடிகள் விநாயகப் பெருமான் மீது மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவை பாடியுள்ளார். விநாயகப் பெருமானையே மூத்தபிள்ளையார் எனக் குறிப்பிடுகிறார். இவர் விநாயகப் பெருமானை முன்னிலைப்படுத்தி பாடும் பாடல் மிக உருக்கமானது ஆகும்.

(தொடரும் .....

சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்
( விரிவுரையாளர் – பலாலி ஆசிரியர் கலாசாலை )

யா/வண் நாவலர் மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்

# திருமகள் கருணை

காளகத்தில் ஒரு சந்நியாசி நீண்ட நெடுங்காலமாகத் தவம் செய்து கொண்டிருந்தார்.

அவர் சிறந்த ஒழுக்கமும், உயர் குணநலனும் உடையவர்.

ஒரு நாள் அவர் முன் மகாலட்சுமிதேவி தோன்றிக் காட்சி அளித்தார். முனிவர் திருமகளைத் தொழுதார்.

"முனீந்திரா! நீ முன்னே செய்த நல்வினைப் பயன் காரணமாகச் சில நாள் நான் உன்னிடம் தங்கியிருக்கப் போகிறேன்"

"தாயே! நான் தவத்தையே தனமாகக் கொண்டவன். வெறுக்கை (செல்வம்) மீது வெறுக்கையுற்றவன். உமது கருணையும் அதனால் வரும் செல்வமும் நாட்டில் இல்லறத்தாருக்கல்லவா வேண்டும்? என்னிடம் நீ இருந்து பயனில்லை."

"தபோதனரே! இப்போது உனக்குச் செல்வம் வேண்டாம் என்று இருக்கலாம். முன்னே நீ செய்த புண்ணியத்தின் பயனாக உன்னிடம் குறிப்பிட்ட ஒரு காலம்வரை நான் இருக்கத்தான் வேண்டும். இது இறைவனுடைய அருளாணையின் நியதி. நான் உன்னிடம் இருக்கும் போது உனக்கு எல்லாம் நன்மையாகத்தான் முடியும். ஒரு பயமும் வராது. சகல சக்திகளும் உண்டாகும். அரச மரியாதைகள் கிடைக்கும். உலக மக்கள் உன்னைப் பெரிதும் மதித்துக் கொண்டாடி உபசரிப்பார்கள்."


முனிவர் நீராடித் திரும்பும் வழியில் ஒரு பெரும் புதையல் வெளிப்பட்டது. அதில் தங்கப்பவுண்கள் நிறைந்திருந்தன. லட்சுமி கடாட்சம் ஏற்பட்டிருக்கிற காரணத்தால் அவருடைய காலடியில் அது வந்தது. அவரோ பாசம் விட்டவர். அதைக் கண்டு சிரித்தார். "தேவி! இது எனக்கு ஏன்? தலைமயிர் இல்லாதவருக்கு மலர்ச் செண்டால் என்ன பயன்? தவம் செய்கிற எனக்கு இந்தப் பணம் எதற்கு?" என்று கூறி, அதனைத் தீண்டாமலேயே தாம் தவம் செய்யும் மரத்தடியடைந்தார்.

மறுநாள் முனிவர், "நம்மிடம் திருமகள் தங்கியிருக்கிறாளே! அரச மரியாதை கிடைக்கும் என்றாளே! இதைச் சோதித்துப் பார்ப்போம்" என்று எண்ணினார்.

★ அன்னைக்கு உதவாதவன் யாருக்கும் உதவாதவன். ★

அந்தக் காட்டுக்கு அருகில் ராஜசேகரம் என்ற ஒரு நகரம். அதனைப் பராந்தகன் என்ற அரசன் அரசு புரிந்து வந்தான்.

முனிவர் அரசவை சென்றார். பெரிய மண்டபம்; அமைச்சர்கள், பிரதானியர்கள், ஏனைய பரிசனங்கள் புடைசூழ மன்னர் பெருமான் அரியாசனமீது அமர்ந்திருந்தான். முனிவரைக்கண்டு அரசன் எழுந்து எதிர் வந்து தொழுதான்.



முனிவர் மன்னவன் தலையில் இருந்த மணிமகுடத்தைக் காலால் உதைத்தார். (வடமலிதேவியின் சொல்லைச் சோதிக்குமாறு இவ்வாறு செய்தார்.)

சபையில் உள்ளவர்கள் 'ஆ! ஆ!' என்று அலறினார்கள். அமைச்சர்கள் திடுக்கிட்டார்கள். மன்னவனின் மனம் பதறியது. அந்த ஒருகணத்தில் சபையே ஆடிவிட்டது. முனிவருக்கு அரசனால் என்ன ஆபத்து வருமோ என்று எல்லோரும் எண்ணினார்கள்.

★ அன்புக்காகவே அன்பு செலுத்த வேண்டும். ★

லட்சுமிதேவி முனிவருடைய நடையை நோக்கிப் புன்னகை புரிந்தாள். 'இந்த முனிவனிடம் நாம் அருள் புரிந்ததால் இவன் வெறிபிடித்தவன் போல் இப்படி மன்னவனுடைய மணிமகுடத்தை உதைத்தானே!' என்று கருதினாள்.

உடனே திருமகள் அருளால் அந்தக் கிரீடத்திலிருந்து ஒரு நாகப் பாம்பு வெளிவந்து படம் எடுத்து ஆடியது. இதைக் கண்ட அரசனும் அவையோரும் வியப்புக் கொண்டார்கள்.

“ஆ! முனிவர்பெருமான் திரிகால ஞானி. நமக்கு வரஇருந்த இடரைக் கருணையினால் தவிர்த்தருளினார்.

இந்தப் பாம்பு மணிமுடிக்குள் நுழைந்திருக்க வேண்டும். நான் இதை அறியாமல் எடுத்துத் தலையில் அணிந்து கொண்டேன். ஆ! இந்தப் பாம்பு கடித்திருந்தால் நான் மாண்டு போயிருப்பேன். இதைக் கானகத்தில் தவம் செய்யும் இவர் யோகக் காட்சியால் கண்டு, நாகப் பாம்பு கடித்து அதனால் நான் மாளாது வாழும்பொருட்டு என்னைக் காத்தருள வேண்டிவந்து உதவி செய்தார்” என்று மன்னன் நினைத்தான்.

மாதவ முனிவருடைய மலரடிமீது அரசன் பலமுறை வீழ்ந்து வணங்கினான்.

எல்லோரும் முனிவருடைய அடிமலர் மீது வீழ்ந்து தொழுதார்கள்.

முனிவரைப் புஷ்பரதத்தின் மீது ஏற்றிக் குடை, சாமரம், ஆலவட்டம் முதலிய உபசாரங்களுடன் மேளதாளங்கள் முழங்க விண்ணுலகம் அதிருமாறு. வாணவேடிக்கையுடன் ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள்.

முனிவர் சிந்திக்கிறார்: 'இது என்ன விந்தை! ஒரு விநாடியில் நமக்கு இத்தனைச் சிறப்புச் ராஜ மரியாதையும் நகர்வலமும் நடைபெறுகின்றன. மன்னனைக் காலால் உதைத்தேன். என் காலை வெட்டித் தண்டிக்க வேண்டிய மன்னன் காலில் வீழ்ந்து அடிமையாகி நிற்கிறான். இது திருமகள் அனுக்கிரகம் விளைவித்த அற்புதம்! மணிமுடியிலிருந்து அவள் சர்ப்பமாக வந்து இத்தனை கூத்தும் புரிகிறாள். அவள் இன்னும் என்ன என்ன திருவிளையாடல் செய்யப் போகிறாளோ?' என்று எண்ணித் தமக்குள் சிரித்துக் கொண்டார்.

அரண்மனைக்கு அருகில் உள்ள பூங்காவனத்துக்கு இடையில் கட்டியுள்ள சந்தன மாளிகையில் முனிவரைப் புதிய வெல்வெட்டு விரித்த ஆசனத்தில் அமர வைத்து மன்னன், மன்னனுடைய மனைவி, மகன் இளநீர் தந்து உபசரிக்கிறார்கள்.

கோபத்தில் இருப்பவர்களைச் சமாதானப்படுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிவர் மீண்டும் லட்சுமியின் கருணையின் வலிமையைச் சோதிக்க நினைத்தார்.

நடு இரவு. அரசனும் அரசமாதேவியும் ஒரு கட்டிடத்திற்குள் பஞ்ச சயனத்தின் மீது பள்ளி கொண்டு உறங்கிக் கொண்டிருந்தார்கள். முனிவர் அந்தப் படுக்கை வீட்டுக்குள் நுழைந்து, மன்னனின் முதுகிலும், மகாராணியின் முதுகிலும் பளார் பளார் என்று நான்கு அடி கொடுத்து, இருவரின் கரங்களைப் பிடித்து கரகர என்று மாடுகளை இழுத்து வருவது போல இழுத்துக்கொண்டு வெளியே வந்தார். இது எத்தனை அடாத செயல்! அரசருடைய படுக்கையறையில் மற்றவர் நுழையலாமா? கோப்பெருந்தேவியை மற்றவர் தீண்டலாமா? இப்படி அடிக்கலாமா? தலை போகிற காரியம் அல்லவா இது!

சில விநாடிகள் மன்னன் இன்னதென்றறியாமல் திகைத்து நின்றான். லட்சுமிதேவி திடுக்கிட்டாள். 'தவமுனிவர் திடீரென்று இந்த அடாத செயலைச் செய்து நம்மைச் சோதிக்கிறாரே. நாம் அவரிடம் தங்கியிருக்கும் போது அவருக்கு ஒரு அவமரியாதையும் வரக்கூடாதே!' என்று எண்ணினாள்.

உடனே திருமகள் சொல்லால் அரசன் படுத்திருந்த கட்டிடம் 'திமுர் திமுர்' என்று இடிந்து விழுந்தது.

இதைக் கண்ட மன்னவன், 'ஆ! ஆ! நான் இதன் உள்ளே படுத்து அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தேனே! கட்டிடம் இடியப்போவதை ஞானக் கண்ணால் அறிந்த அருந்தவ முனிவர் என்னைக் காக்கும் கருணையால் இங்ஙனம் செய்திருக்கிறார். இல்லையேல் நானும் என் அரசமாதேவியும் மாண்டு ஒழிந்திருப்போம். இந்தப் பேராபத்திலிருந்து என்னைக் கருணை மேலீட்டினால் முனிவர் பெருமான் காத்தருளினார்.

'இந்த உதவிக்கு என்ன கைம்மாறு செய்தாலும் ஈடாகுமா? வாழ்நாள் முழுவதும் நாம் இவருக்கு மீளா அடிமையாகி வாழ்வதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?' என்று எண்ணிய பராந்தகன் மாதவருடைய மலரடியைப் பல காலும் பணிந்து எழுந்தான். கண்ணீரால் அவருடைய கால்களைக் கழுவினான்.

இந்தச் செயலைக் கண்ட முனிவருக்கு அதிக ஆச்சரியம் ஏற்பட்டது. திருமகளின் கருணைத் திறத்தை நினைத்து நினைத்து வியப்பும் அடைந்தார்.

இவ்வாறு முனிவர் சிலகாலம் அரச மரியாதைகளுடன் மிக உயர்ந்த சுகாசனங்களில் அமர்ந்து எல்லோருடைய வணக்கங்களுக்கும் உரியவராய் விளங்கினார்.

---

திருப்தியுள்ள மனமே தீராத விருந்து.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் இரவு லட்சுமிதேவி அவருடைய கனவில் தோன்றி, "முனிவரே! நான் நாளை காலை உம்மை விட்டு அகலுவேன். இனி உமக்கு இங்கு ஒரு உபசாரமும் நடவாது" என்று கூறி மறைந்தாள். முனிவர் எழுந்தார். திருமகள் விலகி விட்டாள் என்பதை உணர்ந்தார்.

முனிவர் முதல்நாள் மன்னனிடம் கொடுத்த மாம்பழத்தை வெட்டி மன்னன் காலையில் ஒரு துண்டையுண்டான். உடனே மயங்கி விழுந்தான். அரச வைத்தியர்கள் வந்தார்கள். அந்த மாம்பழத்தில் நஞ்சு கலந்திருந்ததைக் கண்டறிந்தார்கள். உடனே மன்னனுக்கு நஞ்சு தீர்க்கும் நன் மருந்தை நல்கினர். அதனால் பராந்தகன் குணமடைந்தான்.

அந்தக் கனி அரண்மனை நந்தவனத்தில் பழுத்தது. அது மரத்தில் இருக்கும் பொழுது நல்ல நாகம் அதில் நஞ்சைக் கக்கியிருந்தது. முனிவர் இந்தக் கனி நஞ்சு கலந்ததென்பதை அறியாமல் மன்னனிடம் முதல் நாள் மாலை தந்தார்.

மன்னன், 'ஓ! இந்த முனிவர் இப்பழத்தில் நஞ்சூட்டி நம்மைக் கொன்று அரசுரிமையைக் கைப்பற்றக் கருதினார் போலும். இவரைக் கொல்வது நல்லதன்று. ஏனென்றால் முன்பு இரண்டு தடவை நம் மரணத்தைத் தடுத்து நமக்கு உதவி செய்திருக்கிறார். ஆனால் இப்போது தீய எண்ணம் கொண்டுள்ள இவருடன் இனியும் பழகக் கூடாது' என்று தன் மனதுக்குள் நினைத்து ஏவலரிடம் முனிவரை யாதொரு இடையூறுமின்றி காட்டில் விட்டு வருமாறு கட்டளையிட்டான்.

காவலர் முனிவரை அழைத்துப்போய்க் கானகத்தில் விடுத்து, "முனிவரே! எமது மன்னரைக் கொல்லும் பொருட்டு நீர் நஞ்சு கலந்த கனியைத் தந்த காரணத்தால் உம்மை மன்னர் அகற்றி விட்டார். இனி நகருக்குள் வாராதீர், வந்தால் தலை போகும்" என்று கூறி எச்சரித்துச் சென்றார்கள்.

முனிவருக்குச் சிரிப்புத்தான் வந்தது.

"ஆ! திருமகள் செய்யும் திருவிளையாடல்தான் என்னே!" அவள் விலகிய அடுத்த கணத்தில் எனக்கு அரச மாளிகையில் இடமில்லை, அன்றியும் அரசனுடைய வெறுப்பும் ஏற்பட்டது.

திருமகள் கடாட்சம் இருந்தால் தீமையும் நன்மையாகும். அவளுடைய கடாட்சம் இல்லையேல் நன்மையும் தீமையாக முடியும். நான் நல்ல எண்ணத்துடன் தந்த மாம்பழமே நஞ்சாக மாறி எனக்கு இந்த நிலையமைந்தது.

---

★ குழந்தையின் பள்ளிக்கூடம் தாயின் இருதயமே. ★

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சுகத்தை விரும்பாதவன். துக்கத்தை மனமுவந்து வரவேற்கிறவன். சாமானியமான மனிதர்கள் என்றால் கதிகலங்கி மதிமயங்கி அதிக வேதனை அடைவார்கள். நேற்று அரசபோகம். இன்று காட்டில் திரியும் யோகம்.

தேவி! நின் இருக்கத்தை அறிந்தேன் சில காலம் என்னிடம் தங்கி நான் வேண்டாம் என்ற உயர்ந்த சிறப்பையெல்லாம் எனக்கு வழியில் தந்து விளையாடினாய்.

"அம்மா! நீ ஆண்டியை அரசனாக்குவாய். துரும்பை இரும்பாக்குவாய். இரும்பைத் துரும்பாக்குவாய். குட்டிச்சுவரை அரண்மனையாகச் செய்வாய். அரண்மனையைக் குட்டிச் சுவராக்குவாய். உன்னால் எல்லாம் ஆகும்.

"தாயே! உனக்கு வணக்கம்" என்று கூறித் தேவியைத் தொழுது விட்டு எப்போதும் போல் மனதையடக்கித் தவம் செய்யத் தொடங்கினார்.

கிருபானந்தவாரியார்

## ஆலயங்கள்

ஆலயம் அமைந்திருக்கின்ற இடம் நல்ல மண் உள்ளதாகவும் நல்ல நீர் உள்ளதாகவும், நல்ல நிழல் உள்ளதாகவும், மொத்தத்தில் மனதிற்கும், உடலிற்கும் மகிழ்ச்சியை அளிக்கக் கூடியதான சூழலைக் கொண்டமைந்திருப்பதை நாம் காணுகின்றோம். இதனால் தான் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என எமது மூதாதையர் கூறி வந்தனர். மேலும் ஓரிடத்தில் அமைந்திருக்கின்ற ஆலயங்கள் அந்தப் பகுதி மக்களின் தொழில்களுடனோ அல்லது அவர்களின் பண்பாட்டுடனோ ஏதோ ஒரு வகையில் தொடர்புடையனவாகவும் இருந்து வருவதையும் நாங்கள் காண்கின்றோம் ஆகவே ஆலயங்கள் எமது ஆத்மீகத்துடன் மட்டுமன்றி வாழ்க்கையுடனும் ஒன்றித்தவை ஆகும்.

மலர் வெளியீட்டில் தமிழ்த்துறைத்தலைவர்
திரு. சிவலிங்கராசா அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து.

காரியத்தில் உறுதியாக இருப்பதுதான் வெற்றியின் இரகசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாலு யுகங்களிலும் வாழ்ந்த மனிதர்கள் பற்றிய வரலாற்றையும் தெற்குப் பாகத்தில் அமைந்துள்ள கலியுகம் பற்றிய வரலாற்றையும்

## புலிப்பாணி முனிவர் தன்பாக்களின் மூலம் பின்வருமாறு விளக்குகின்றார்

மேலும் தொல்காப்பியவுரையிலே ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறிய குறிப்பொன்றினை உளங்கொள்ளுதல் இன்றியமையாததாகும். நிலந்தரு திருவின் நெடியோனாகிய பாண்டியன் மாகீர்த்தி இருபத்து நாலாயிரமாண்டு வீற்றிருந்தாதலின் அவனும் அவன் அவையிலுள்ளோரும் அறிவுமிக்கிருத்தலின் அவர்கள் கேட்டிருப்ப என்றலின் தமிழ் மன்னரது அவைக்காலத்தாரின் அறிவு மிகுதி தெளிவாகிறது. கடல் கோளின் முன்னிருந்த இம்மன்னன் இருபத்து நாலாயிரமாண்டு வீற்றிருந்ததானென்பது நமக்கு வியப்பைத் தருகின்றது. சுமேரிய சரித்திரத்திலும் சலப்பிரளயத்திற்கு முன் இருந்த மன்னர் எண்மருள் ஒவ்வொருவரும் 18600 முதல் 43200 வரையுமுள்ள எல்லையிலவாகிய ஆண்டுகள் வீற்றிருந்தார்கள் என்னும் செய்தி அகப்படுகின்றது. இருவரலாற்றுக்கும் தொடர்பின்மை இதனாலும் புலப்படுகிறது. (இது விபுலானந்தர் ஆய்வின்) அவர்கள் எவ்வளவோ பார்த்து தொடக்கத்தில் எழுதி இருந்தனவோ அவ்வெல்லாமே இன்றைவரையும் அவ்வக் காலத்தின் சனங்களுக்கிசைபத் திருத்தி எழுதப்பட்டு வருகின்றன

ஆனால் சலப்பிரளயத்தின் பின் சில சித்தர்கள் ஆயுர்வேத வைத்திய சாஸ்திரத்தின் சிலபாகங்களை மாத்திரம் தமிழில் மொழி பெயர்த்து, உலகத்தில் உள்ளார்க்கு உபயோகப்படுத்தும் நோக்கமாக எழுதி ஏட்டுப் பிரதிகளாக்கி உதவினர்.

மேற்குறிப்பிட்ட நோவா என்பவன் அறுநூறாம் வயதில் விவாகம் செய்து தொளாயிரத்து ஐம்பதாம் வயது வரையும் உயிரோடு இருந்து மரித்தானெனக் கிறீஸ்து வேதம் கூறுகின்றது. அவனிறந்து போய் இப்போது 4783 வருடங்களாகின்றன. அவனுடைய சந்ததியினரான தற்கால உலக மனிதர்கள் ஏறக்குறைய 25 வயதில் விவாகம் செய்து எழுபது என்பது வயதளவில் மரிக்கிறார்கள். ஆகையால் வித்தனை ஒடுங்கி வரும்

★ நல்ல எண்ணங்களை நினைத்தல் வெற்றியாகும். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம். உலகத்திலுள்ள மனிதர் சற்றுச் சற்றாய்ச் சிறுத்து நாலுமுழம் இரண்டு முழமாகி சிறுமனிதனாகக் கூட பிறந்தாலும் ஆச்சரியப்பட இடம் இல்லை.

இதுபற்றி கலியுகம் பிறப்பதற்கு முன் புலிப்பாணிமுனிவர் தன் அருட்பாக்களின் மூலம் கலியுகத்தைப்பற்றி அழகாக ஆச்சரியப்படத்தக்க வகையில் பாடியுள்ளார் என்பதை வாசகர்களுக்கு இனித்தரவுள்ளோம்.

மேற்கூறிய மனுவும் அவரின் குடும்பத்தோரும் மேருவின் தென் பாகத்திற்கு வந்து பல்கிப் பெருகி அவ்விடத்தில் வசிக்கின்ற தாய தற்காலத்திலைக் கலியுகமென அழைக்கின்றனர் இக்கலியுகத்தில் வசிக்கும் மனித வர்க்கத்தினர் யாவரும் சூத்திரரே. இவர்களை ஞான வழியின் படி சரிவையாளரெனலாம் இவர்களின் விபரங்களை மேலே காட்டிய
" பொய்யில்லை ........ சொன்னாருண்டோ "

" உண்டான ......... நிச்சயந்தானில்லைத்தானே "
" தானென்ற ......... பலவாறிடமே கந்தானே "
" தானான ...... பாண்டமாமே "

என்னுஞ் செய்யுட்களாலறிக.

கலியுகம் 4, 32, 000, வருஷங்களில் 5032 வருஷங்கள் சென்றன போக, மீதியான வருடங்களின்னுஞ் செல்லாதிருக்கின்றன.

புலிப்பாணி வரைந்து வைத்த மேலே கூறிய விஷயங்களைக் கிறிஸ்தவர்களின் பஞ்சாகமங்களில் முன்றாவது ஆதியாகமம் இரண்டாம் அதிகாரம் பின்வருமாறு கூறுகின்றது.

" தோட்டத்திற்குத் தண்ணீர் பாயும்படி ஏதேனிலிருந்து ஒரு நதியோடி அங்கேயிருந்து பிரிந்து நாலு பெரிய ஆறுகளாயிற்று "

முதலாம் ஆற்றுக்கு " பைசோன் " என்று பேர் அது " ஆவிலா தேசம் முழுவதையும் சுற்றியோடும். அவ்விடத்திலே பொன் விளையும். அத்தேசத்தின் பொன் நல்லது அவ்விடத்திலே பிதோலாகும் கோமேதகக் கல்லுமுண்டு.

இரண்டாம் ஆற்றுக்குக் " கீகோன் " என்று பேர். அது எத்தியோப்பியா தேசம் முழுவதையும் சுற்றியோடும்.

மூன்றாம் ஆற்றுக்கு " இதெக்கேல் " என்று பேர். நாலாம் ஆற்றுக்கு " ஐபிராத்தென்றுபேர் "

[ தொடரும் ... ...

" சிவம் "

வாழ்வு என்னும் மலரிலே அன்பு என்பதே தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கல்வி உன்னைக் காக்கும்

'படிப்பு படிப்பு எந்த நேரம் பார்த்தாலும் படிப்புத் தானா?'

சண்முகத்தின் மனம் பொருமியது. அவன் தந்தை அவனைப் 'படி படி' என்று அறிவுறுத்திக் கொண்டேயிருக்கிறார். அவனுக்கோ அது தலையில் பேரிடி இறங்குவது மாதிரி இருக்கிறது!

அப்பாவுக்கு அவன் ஒரே பிள்ளை. அதனால் செல்லமும் சீராட்டலும் உண்டு. ஆனால் கல்வி விஷயத்தில் மட்டும் கண்டிப்பும், கடுகடுப்பும் அதிகம் காட்டினார் அவர். இது அவனுக்குப் பிடிக்கவில்லை.

அப்பாவின் மன உறுதியை எப்படியாவது மாற்ற எண்ணினான் சண்முகம். அதற்கு என்ன செய்யலாம் என்று திட்டமிட்டான்.



வாழ்க்கையில் வெறுப்புற்று மாதிரி நடித்து தந்தையின் தொந்தரவு தாங்க முடியாமல் வீட்டை விட்டு ஓடிவிட்டது போல ஒரு சூழ்நிலையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தி பசி வேளைக்கு வீட்டுக்குப் போகாமலிருந்து, பட்டினி கிடந்து உடம்பை இளைக்கச் செய்து, அவர் மனத்தில் பாசத்தை தூண்டிவிட்டு இப்படியெல்லாம் நினைவு ஓடியது...

சண்முகம், நினைத்த படியே வீட்டை விட்டு வெளியேறினான், ஆனால் இப்போது ..

சண்முகத்தின் கால்கள் ஓய்ந்தன. அலைந்து திரிந்து பல இடங்களைச் சுற்றி வந்த அவன் கடைசியாக விநாயகர் கோவில் பிரகாரத்தில் சற்று ஒதுக்குப் புறமாய் அமைந்த மறைவிடத்தில் வந்து படுத்துக் கொண்டு விட்டான்.

காலைச் சிற்றுண்டி, மதியஉணவு இரண்டையும்" தியாகம் செய்ததன் விளைவு, அவன் நாடி நரம்புகளையெல்லாம் துவள வைத்தது. நினைவு அலைகள் அவனது மனக்கரையில் முட்டி மோதிச்சிதறுண்டு போயின.

இரண்டு வேளைப்பட்டினியே ஆளை இப்படி உருக்குலைக்கிறதே, தீர்மானித்தபடியே பல நாள் உண்ணாவிரதம் இருப்பது எப்படி ? ஊரைச் சுற்றி வந்ததற்கே இந்தக் கதி என்றால் வெளியூர்களுக்கெல்லாம் நடந்தேபோய்க் காலம் தள்ள நினைத்தால் முடியுமா ?

' உயிரோடு இருப்பதால் தானே இந்த பசியும் தாகமும் ? செத்து விட்டால் இந்த உபத்திரவம் எல்லாம் இருக்காதே ' என்று விபரீதமாகவும் நினைக்கத் தூண்டியது அவன் மனசு.

நிழல்கள் நீளம் நீளமாக விழத்தொடங்கின. சூரியன் கிரணங்கள் மேல் திசையில் சுருங்கலாயின. மரக்கிளைகள் மெல்ல காற்றில் சலசலத்தன. சண்முகத்தின் மனதிலும் ஒரு சலசலப்பு.

கோயிலின் வெளிப்புறத்தே சைக்கிள் மணியோசை கேட்டது. " மாலைச் செய்திப் பேப்பர் மாலை செய்திப் பேப்பர். "

எங்கோ பாழுங் கிணற்றுக்குள் அமிழ்ந்திருந்தது போல் காது அடைத்தது. ' கண்கள் சுருங்கி தன்வசம் இழந்து கிடந்து சண்முகத்தை உசுப்பி எழுப்பியது இந்தச் சத்தம் பரபரப்புடன் எழுந்த அவன் கோயிலின் வாயிற்புறம் விரைந்தான்.

சந்நிதித் தெருவில் வீட்டுக்கு வீடு பத்திரிகை விநியோகம் செய்து வரும் சோமு கண்ணில் பட்டான். அவனைக் கண்ட சண்முகம் சிலை மாதிரி அசைவற்று நின்றான் சற்றுநேரம்.

பரம ஏழை சோமு! அவன் பிழைப்பு இப்படியா நடக்கிறது? ஆனாலும் படிப்பில் சுட்டிகையாயிருக்கிறானே.

புனிதமான செயல்களால் வாழ்வதே புகழ் எனப்படும்.

தற்செயலாகத் திரும்பிய சோமுவும் சண்முகத்தைப் பார்த்து விட்டான். நண்பன் முகத்தில் தென்பட்ட சோர்வு அவனைத் திடுக்கிட வைத்தது.

"ஏன்டா சண்முகம் என் கன்னம் மூஞ்சியெல்லாம் உள்ளேபோய்க் கிடக்கு. வசதியானவர் வீட்டுப்பிள்ளை நீ வருந்தி இளைக்கும்படி என்ன வந்தது உனக்கு?" என்று திகைப்புடன் கேட்டான் சோமு.

"அதிருக்கட்டும் சோமு வகுப்பில் எல்லாப் பாடங்களிலும் முதல் மார்க்கு எடுக்கிறவன் நீ. இந்த மாதிரி பத்திரிகை விற்றுக்கொண்டு எப்படி படிப்பிலும் கவனம் செலுத்த முடிகிறது உன்னால்" என்று தன் சந்தேகத்தை வெளியிட்டான் சண்முகம்.

"எங்கள் குடும்பம் ரொம்பவும் ஏழ்மையானது. அப்பா கூலி வேலை செய்கிறவர். அவர் சம்பாத்தியம் எங்களுக்கு வயிற்றுக்கே போதமாட்டேன் என்கிறது. என் புத்தகம், பள்ளிக்கூடச் சம்பளம் எல்லாவற்றுக்கும் பேப்பர் விற்றுச் சம்பாதித்துக் கொள்கிறேன் வேறு என்ன செய்கிறது?"

சோமுவின் வார்த்தைகள் சண்முகத்தின் உள்ளத்தைத் தட்டி எழுப்பின. நல்ல வசதியும் வாய்ப்பும் இருந்தும் படிக்கக் கசக்கிறது எனக்கு. ஆனால் கூலி வேலை செய்து வயிற்றைக் கழுவும் குடும்பத்தைச் சேர்ந்த இவனுக்கு எந்தக் கஷ்டம் எப்படி இருந்தாலும் படித்தே தீரவேண்டும் என்ற ஆர்வமும் துடிப்பும் இருக்கின்றன. கலகலப்புடன் போராடும் வாழ்க்கை அவன் ஊக்கத்தைத் தடை செய்து விடவில்லை. எந்தத் துன்பத்தையும் எதிர்த்து நின்று வாழ்வில் முன்னிலைக்கு வருவதே லட்சியமாய் உழைக்கிறான். சிந்தனை எதிர்பாராத மாறுதலை உண்டு பண்ணியது சண்முகத்திடம்.

"சோமு இப்போது உன்னை நான் சந்தித்தது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்றுத் தெரியுமா?"

"ஏன் என்ன விஷயம்?"

"படிப்புக்குப் பயந்து படிக்கச் சொல்லி வற்புறுத்தும் அப்பாவுக்கு பயந்து எங்கேயாவது ஓடிப்போக நினைத்தேன். என்னைக் காணாத வருத்தத்திலே என் பெற்றோர் கலங்கிக் கண்ணீர்விட்டுப் பிள்ளை படிக்கா விட்டாலும் போகிறான்! திரும்ப வந்தாற் போதும்! என்று சொல்கிற கட்டத்தில் வீட்டுக்குப் போவது என்று திட்டம் போட்டேன். ஆனால் அதெல்லாம் தப்பு என்பது தெரிந்து போச்சு எனக்கு!" என்றவன் காலையிலிருந்து அந்த நேரம் வரை தன் நிலை என்ன என்பதையும் விளக்கினான்.

தொகுப்பு: சந்நிதியான் ஆச்சிரமம்

---

★ செல்வம் குவிக்கப்படும் இடத்தில் மனிதர்கள் அழிகிறார்கள். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் துளிகள்

(தொடர்ச்சி)

இன்றைய விஞ்ஞான உலகில் நாம் எத்தனையோ விந்தைகளை கண்டம்விட்டு கண்டம் பாயும் ஆயுதங்களை வானவெளியிற் சஞ்சரிப்பதை ஓர் இடத்தில் நடப்பதை உடனுக்குடன் பல இடங்களில் இருந்து பார்க்கும் முறையை, பலகிரக மண்டலங்களுக்குச் செல்வதை அறிகின்றோம். காண்கின்றோம். அனுபவிக்கின்றோம். ஆனால் விஞ்ஞானம் அற்ற காலமாகிய இராமாயணம், பாரதம் நடந்த காலத்தில் இப்படியானவை நடைபெற்றமைக்குரிய சான்றுகள் பாரதத்தில், இராமாயணத்தில் உண்டு. ஆகவேதான் இவற்றை நன்கு வாசித்து உணர்ந்தவன் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்கின்றனர் பெரியோர்.

பாரதப்போர் நடைபெற்றபோது பிறவிக்குருடனான திருதராட்டிரனிடம் கண்ணன், அரண்மனையில் இருந்தவாறே போர்க்களத்தில் நடைபெறும் காட்சிகளைக் காண்பதற்குரிய பார்வையைத் தருகிறேன் என்று கேட்டதற்கு வேண்டாம் எதையும் பார்க்காத எனக்குப் போர்க்களத்தில் நடைபெறும் அகோரக்காட்சிகள் வேண்டாம். அதை எனது தம்பியும் அமைச்சருமான சஞ்சயனுக்குக் கொடுக்கும்படி வேண்டிப் பெற்றுக்கொண்டான். அதன்படியே இன்று நாம் தொலைக்காட்சியிற் காண்பதுபோல் அன்றும் கண்டார்கள். அன்றியும் நடந்தவற்றையும், நடக்கப்போகிறதையும் அறியும் சக்தியும் பெற்று இருந்தனர்.

இன்று விஞ்ஞான உலகத்தில் பாவிக்கப்படும் ஆயுதங்களிலும் பார்க்க அதிசக்திவாய்ந்த அஸ்திரங்களை அன்று பாவித்ததாக அறிய முடிகிறது. நாம் ஆழ்ந்து சிந்திப்போமானால் உலகத்தில் இன்று நடைபெறும் அத்தனை செயல்பாடுகளும் அன்று நடைபெற்றுள்ளன என்பதைப் பாரதம், இராமாயணம் கூறுகின்றன. இவை வற்றாத நீரூற்றுப்போல் புதிய புதிய கருத்துக்களை, தத்துவங்களைத் தருகின்றன.

நமது இந்துசமயத்தில் திருநாவுக்கரசுநாயனார், திருக்கயிலாயம் செல்லவேண்டும் அக்காட்சிகளைக் கண்டு களிக்க வேண்டும் என ஆசை கொண்டார். எப்படியும் அங்கே செல்ல வேண்டும் என விரதம் பூண்டார். அதன்படியாக நடந்தார், தவழ்ந்தார், உருண்டார். இவரது இம் மூன்று செயலாலும் உடம்பில் பல காயங்கள் ஏற்பட்டு இரத்தம் சிந்தத்தொடங்கியது. அப்படியிருந்தும் அங்கப்பிரதட்சணம் செய்தார். இச்செயற்பாட்டை இறுதியாகச் சோதிக்க விரும்பிய இறைவன் வயோதிப

ஆயாசத்திற்கு ஒரே மாற்று மருந்து சாதனைதான்.

வடிவில் தோன்றி பிரமா, விஷ்ணு, தேவர்களை செல்லமுடியாது கஷ்டப் படும் நிலையில் உம்மால் எப்படிச் செல்ல முடியும். இப்பவே உனது உடலில் பல காயங்கள் ஏற்பட்டு இரத்தம் சிந்துகின்றது. சதைபிரிந்து கற்களில் ஒட்டிக்கொள்கின்றன. எனவே வீண்முயற்சியை விட்டுத் திரும்பிச் செல்லும்படி கூறினார்.

அசைக்கமுடியாத பிடிவாதமாக விரதம்பூண்ட நாவுக்கரசர் அழிந்து போகும் இவ்வுடலுடன் திரும்பேன், சென்றே தீருவேன் என்று எதுவித சலனமின்றிச் சொன்னார். இதனால் மகிழ்ச்சியுற்ற இறைவன் அருகிலே ஒரு நீரோடையை உருவாக்கி அன்பனே அதிகம் களைத்து விட்டாய் சற்று அருகில் இருக்கும் நீரோடையில் நீராடிக் களைப்பாறிய பின் செல்லும் என்றார். இவ்வார்த்தைச் செவிமடுத்த நாயனார் அப்படியே அவரின் கூற்றுப்படி நீராடினார். என்ன அதிசயம் நீராடியபோது அவரின் உடலில் உள்ள காயம் யாவும் நீங்கியதுடன் திருக்கைலாயக் காட்சி யையும் கண்டுகளித்தார். அந்நேரத்தில்தான் அக்காட்சியை மற்றவரும் அறியும் பொருட்டு "மாதர்ப்பிறைக் கண்ணியானை" என்னும் திருப் பதிகத்தைப் பாடி அருளினார்.

ஒருவன் இக்கரையிலிருந்து மறுகரையை அடைய விரும்பிச் செயலில் இறங்கினான் நீந்திச்சென்றான், நடுப்பகுதியை அடைந்துவிட்டான். கட்டாத்தண்ணீர் எதுவும் செய்யமுடியாத நிலை. திரும்பிச் செல்வதா அல்லது தொடர்ந்து முயற்சி செய்வதா எப்படியும் என்றோ ஒரு நாள் இவ் உடம்பு அழிந்துதானே போகும் ஆகவே, எப்போது அழிந்தாலும் சரிதானே என்னும் வைராக்கியம் பிடித்த விரதகாரன் சென்று விடுவான். பட்டம் பெற்று விடுவான். நன்னிலையடைந்துவிடுவான். விரதத்தை மனச்சஞ்சலத்தால் இடைநடுவில் விட்டுத்திரும்பியவன் மீண்டும் பல இன்னல்களை அனுபவிக்கிறான். ஈடேறமுடியாது தத்தளிக்கிறான். மீண்டும் மீண்டும் பிறவித்துயரில் சிக்குகிறான்.

இறைவன் எம்மை எல்லாம் பலவித வழிகளில் ஈடேற்ற வைக் கிறான். இவ்வாறவன் சாம, பேத, தான தண்டமூலம் நல்வழிப்படுத்து கிறான். இந் நான்கு படிகளில் முன்வினைப் பயனாக முதற்படியிலேயே நன்னிலையடைந்தவரும் உண்டு. இறுதியான நான்காவது படியாகிய தண்டமூலம் திருந்தி நன்னிலையடைபவரும் உண்டு. இத்தண்டத்தில் மனிதனால் மனிதருக்கு வழங்கப்படும் தண்டனையுடன் இறைவனால் பலவித நோய்கள் மூலம் தண்டிக்கப்பட்டும் நன்னிலையடையாது மறு பிறப்பெடுத்து உழல்பவரும் உண்டு. இத்தண்டனையை அனுபவிப்ப வனைப் பார்த்து, உணர்ந்து, உண்மை நிலையை உணர்ந்து இறுதியில்

இறைவனிடம் பயமும் பக்தியும் மனதில் கொள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்முடன் நாம் செய்த பாவ புண்ணியம் இறை தொண்டுதான் காக்கும் என அறிந்து தொண்டு செய்து முக்தியடைந்தவரும் உண்டு. இவற்றை உணர்வதற்காகவே பல அறிஞர்கள், அருளாளர்கள், நாயன்மார்கள், முனிவர்கள், ரிஷிகள் பலவற்றை அருளிச்செய்துள்ளனர். இவற்றை நன்கு சிந்தித்துச் செயற்படுங்கள். நன்னிலையடையுங்கள்.

ஆகவே அன்பர்களே மௌனம் ஆறு வகைப்படும் என்று நூல் வெளியிட்டன்று கூறினேன். 05 - 03 - 98ல் இருந்து 31 - 10 - 98 வரை ஆறாம் படியிலிருந்து 01 - 11 - 98 முதல் (5) ஐந்தாம் படிக்கு மாறியுள்ளேன். இப்படியே படிப்படியாக மாறிவரும்போதுதான், ஒவ்வொரு படிகளின் நிலைகளை பூரணமாய் அறியமுடியும். தினமும் இறைவழிபாட்டிற்கு; தியானத்திற்கு என ஒரு சில நிமிடங்களேனும் ஒதுக்கிச் செயற்படுங்கள், நன்னிலையடையுங்கள்.

க. விஷ்ணுகோபால
(குணபாலகசுவாமிகள்)

உனக்கு மன அமைதி வேண்டுமானால் பிறர் குற்றம் காணாதே; மாறாக உனது குறைகளையே பார். உலகம் முழுவதையுமே (அன்பினால்) உனக்குச் சொந்த மாக்கிக்கொள். இவ்வுலகில் யாரும் உனக்கு அந்நிய ரல்லர். உலகம் உனதே.

ஸ்ரீ சாரதாதேவி


பண்பில்லாத இடத்தில் சுதந்திரம் இருக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான்

ஒரு குழந்தைக்கும் தாய்க்கும் உள்ள உறவு நிலைபோன்றதே அடியவர்களுக்கும் சந்நிதிமுருகனுக்கும் உள்ள தொடர்பாகும். ஒரு குழந்தை அறியாமையினாலோ அல்லது அறிவுக்குறைவினாலோ தவறுகளோ அல்லது பிழைகளோ விடுவது வழக்கம் அந்தச்சந்தர்ப்பங்களில் ஒரு தாயானவள் அவற்றை மன்னித்தோ அல்லது திருத்தியோ அல்லது சிறிய படிப்பினைகளைக் கொடுத்தோ நல்வழிப்படுத்தி அந்தக்குழந்தையை பூரணமான மனிதனாக மாற்றுவது இயல்பு இதேபோன்றுதான் சந்நிதிமுருகனும் குழந்தைபோன்ற தனது அடியவர்கள் மீது ஆழமான அன்பைச் செலுத்தி வருகின்றான். அவர்கள் விடுகின்ற தவறுகள் பிழைகள் எல்லவற்றைப் பொறுத்தோ, நல்வழிப்படுத்தியோ அவர்களை ஆத்மீகத்தில் ஈடேற்றுதற்காகத் தன்னுடைய திருவிளையாடல்களைத் தினமும் நடாத்திக் கொண்டேயிருக்கின்றான். இவ்வாறான ஒரு திருவிளையாடலையே பின்வரும் சம்பவம் எமக்கு எடுத்துக்காட்டுகின்றது.



அன்புடன் கொடுப்பதே அமிழ்தம்

அச்சுவேலியைச் சேர்ந்த திரு. இ. கார்த்திகேசு அவர்கள் சந்நிதி முருகன்மேல் பக்தி உள்ள ஒரு அன்பர். இவருடைய உறவு முறையில் உள்ள ஒரு குடும்பம் வருடத்தில் ஒருமுறை சந்நிதிக்கு வந்து விசேஷபூசைகள் அபிஷேகங்கள் செய்வதுடன் சந்நிதியான் ஆச்சிரமத்தின் அன்னதானத் தொண்டையும் மேற்கொள்வது வழக்கம். இவ்வாறு இவர்கள் சந்நிதிக்கு வந்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவதற்கு ஒரு தொடர்பாளராக நீண்டகாலமாகச் செயற்பட்டுக் கொண்டிருப்பவர்தான் திரு இ. கார்த்திகேசு அவர்கள். இதுபோன்ற ஒரு செயற்பாட்டிற்காக அதாவது சந்நிதியான் ஆச்சிரமத்தில் 1998ஆம் ஆண்டு ஒரு அன்னதானத்தை மேற்கொள்வதற்காக 12 - 11 - 98 வியாழக்கிழமை மாலை ஐந்து மணியளவில் சந்நிதியான் ஆச்சிரமத்திற்குத் தனது மோட்டார்ச்சைக்கிளில் வருகைதந்திருந்தார். தனது மோட்டார்ச்சைக்கிளை ஆச்சிரமத்தின் வாயிலில் நிறுத்தி விட்டு ஆச்சிரமத்தின் சுவாமிகளிடம் சென்று வெள்ளிக்கிழமை அன்னதானம் வழங்குவதற்குரிய முன் ஆயத்தங்களைச் செய்து விட்டு ஒரு தொகைப் பணத்தையும் அவரிடம் வழங்கிவிட்டு வீடு திரும்புவதற்கு ஆயத்தமானார்.

இவ்வாறு திரு. இ. கார்த்திகேசு அவர்கள் வீடு திரும்புவதற்கு ஆயத்தமாகிக்கொண்டிருந்த அதேவேளை ஆலயத்தில் பூசை ஆரம்பமாவதற்கறிகுறியாக கோவில்மணியும் அடிக்கத்தொடங்கியது. அப்பொழுது அவருக்கு மிக அவசரமான அலுவல்கள் இல்லாவிட்டாலும் மாலை நேரமாகையால் வீட்டிற்குச் சென்றுவிட வேண்டும் என்ற ஆதங்கத்தினால் ஆச்சிரமத்திற்கு வெளியே வந்து அங்கே வாயிலில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார்ச்சைக்கிளை ஸ்ராட்பண்ணுவதற்கு ஆயத்தமானார். ஆனால் பூசை ஆரம்பிப்பதற்கு அறிகுறியாகக் கோவில் மணி அடித்துக் கொண்டிருந்ததனால் ஒருமுறை பூசையைப்பார்த்துவிட்டுச் செல்லலாமா என்றும் அவருடைய மனம் நினைக்கத்தொடங்கியது. இவ்வாறு பூசையைப் பார்த்து விட்டுச்செல்வதா அல்லது வீட்டிற்குச் செல்வதா என்ற இரண்டு விடயங்களில் எதைச்செய்வது என்று தெரியாது மனச்சஞ்சலப்பட்ட திரு. இ. கார்த்திகேசு அவர்கள் இறுதியில் ஏதோ மனத்திற்குள் முடிவு எடுத்தவராக வீட்டிற்குச் செல்ல ஆயத்தமானார். ஆம் வீட்டிற்குச் செல்வதற்காகத் தன்னுடைய மோட்டார்ச் சைக்கிளை ஸ்ராட் பண்ணுகின்ற செயற்பாட்டில் ஈடுபட்டார். ஆனால் அவருடைய முயற்சி கைகூடவில்லை. ஒருமுறைக்குப் பலமுறை முயற்சித்தும் அவர் களைத்தது தான் மிச்சம் அது ஸ்ராட் ஆகவில்லை. இப்பொழுதுதானே ஓடிவந்து நிறுத்திய சைக்கிள் எவ்வாறு அது ஸ்ராட்டாகாமல் இருக்கமுடியும் என்ற சிந்தனை அவருடைய மனத்தில் அடிக்கடி வந்து கொண்டிருந்ததனால் அவருடைய உடல் களைத்த நிலையிலும் இது எப்படியும் ஸ்ராட் ஆகிவிடும் என்ற நம்பிக்கையால் தனது முயற்சியைத் தொடர்ந்து கொண்

பொதுவாக எல்லோரும் சந்திக்குமிடம் சமாதிதான்

டயிருந்தார். ஆனால் என்னபயன் அது ஸ்ராட் ஆகவில்லை ஏற்கெனவே உடல்மட்டும் களைத்திருந்தவரின் மனமும் இப்பொழுது சோர்வடையத் தொடங்கியது. இறுதியில் இனிமேல் இது ஸ்ராட் ஆகமாட்டாது என்ற முடிபுக்கு வந்துவிட்டார்.

இப்பொழுது களைத்த நிலையில் திரு. கார்த்திகேசு கோவில் பக்கம் தனது கவனத்தைத் திருப்பினார். அங்கே பூசை நடை பெற்றுக் கொண்டிருப்பதற்கு அறிகுறியாக மணியோசையுடன் மேளச் சத்தமும் ஒலித்துக் கொண்டிருந்தது. தான் இங்கே செலவு செய்த நேரத்தில் கோவிலுக்குச் சென்றிருந்தால் பூசையைத் தன்னும் முழுமை யாகப் பார்த்திருக்கலாமென்று அவருடைய மனம் அப்பொழுது யோசித் தது. சரி பரவாயில்லை இப்பொழுது தானும் கோவிலுக்குச் செல்வோம் என்ற முடிவுடன் ஆச்சிரமத்தின் வெளிவாயிலில் நின்ற மோட்டார்ச் சைக்கிளை அப்படியே விட்டு கோவிலுக்குச் சென்று நடைபெற்றுக் கொண்டிருந்த பூசையில் பங்குபற்றி முருகனை வழிபட்டார். அங்கே பூசை யில் பங்கு கொண்டு சந்நிதியானை வழிபட்டவருடைய உள்ளத்தில் ஒரு அமைதியும் திருப்தியும் ஏற்பட்டது. அப்பொழுதுதான் அவருடைய மனம் நினைத்தது. இவ்வாறான ஒரு மனநிறைவைத் தரக்கூடிய பூசையை தான் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைத்தும் அதனைப் பார்க்காது திரும்ப நினைத்தது எவ்வளவு பிழையான முடிவு என்று. அதுமட்டுமல்ல இவ் வளவு தூரத்திலிருந்து வந்த தான் பூசை நடைபெற்றுக் கொண்டிருக்கும் சூழலுக்குள் இருந்தும் அதனைத் தவறவிட நினைத்தது ஒரு முட்டாள்த் தனமான முடிவு என்பதையும் உணர்ந்து கொண்டார். ஆனாலும் சந்நிதி முருகனுடைய அருட்கடாட்சத்தினால்தான் சிக்கப்பட்டு, சந்நிதியானை வழிபட்ட திருப்தியில் மீண்டும் தனது மோட்டார்ச் சைக்கிள் நிறுத்தப் பட்டிருந்த இடத்தை வந்தடைந்தார்.

அப்பொழுது பழுதடைந்த மோட்டார்ச் சைக்கிளை யாரிடம் காட்டுவது என்று அவர் யோசிக்கத் தொடங்கினார். நேரம் போய்க் கொண்டிருந்தகனால் இருட்டுவதற்கு முன்பே வீடு போய்ச் சேர்ந்துவிட வேண்டும் என்று அவரது மனம் ஆதங்கப்பட்டுக் கொண்டிருந்தது. மோட் டார்ச் சைக்கிளில் என்ன பிழை ஏற்பட்டது என்பது கூடத் தெரியவில் லையே! அது தெரிந்தால்கூட ஏதாவது நடவடிக்கையில் ஈடுபடலாம் என மனத்துக்குள் நொந்து கொண்டார். ஆனாலும் எதற்கும் ஒருமுறை ஸ்டாட் செய்து பார்ப்போம் என்ற சிந்தனையுடன் மோட்டார்ச் சைக் கிளை ஸ்ராட் செய்தார். என்ன ஆச்சரியம்! ஒரேமுறையில் அது ஸ்ராட் ஆகிவிட்டது. அவருடைய உள்ளத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சியை நாங்கள் சொல்லவும் வேண்டுமோ? தனது தவற்றை உணர்ந்த பின்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைத் தாய் அரவணைக்கும் பொழுது அந்தத் தாயின் அரவணைப்பால் பிள்ளையின் உள்ளத்தில் பொங்கி எழும் மகிழ்ச்சியைப் போல் அவருடைய மனம் ஆனந்தத்தால் பரவசமடைந்தது.

எமது பேரவை தொடர்பான சில வேலைகளைக் கவனிப்பதற்காக 12 - 11 - 98 மாலையில் சந்நிதியான் ஆச்சிரமத்திற்குச் சென்ற அடியேனும் அன்று நடந்த அற்புத நிகழ்வை நேரில் பார்க்கக் கூடியதாக இருந்தது. சந்நிதிமுருகன் தனது உண்மையான அடியவர்களுக்காகப் பலசோதனைகளைக் கொடுத்துத் தனது திருவிளையாடல்களைக்காட்டி இறுதியில் அவர்களைத் தனது முழுமையான அடியவர்களாக மாற்றுகின்ற இவைபோன்ற நிகழ்வுகள் தினமும் நடைபெறுகின்ற சம்பவங்கள் தாமே!

ஓம் முருகா!

ந. அரியரத்தினம்
பொருளாளர்

குறிப்பு: சந்நிதி முருகப் பெருமானுடைய இவ்விதமான அற்புத நிகழ்வுகள் தொடர்ச்சியாக ஒவ்வொரு மலரிலும் வெளிவரவுள்ளன. இவ்வாறான அற்புத நிகழ்வுகளை அனுபவித்த அன்பர்கள் தகுந்த ஆதாரத்துடன் விளக்கமாகக் குறிப்பிட்டு மலர்க்குழுவிற்கு அனுப்பினால் அவற்றையும் இத்தொடரில் இடம் பெறச் செய்யலாம்.

சகுனம் பார்ப்பது தவறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மன்னர்கால இலக்கியங்கள்

(தொடர்ச்சி.....

சென்ற இதழில் யாழ்ப்பாண மன்னர் காலத்தில் எழுந்த சோதிட வைத்திய நூல்கள் எழுந்தவையென்று பார்த்தோம். அக்காலத்தில் வேறு வகையான நூல்களும் தோன்றின இலங்கையின் வடபகுதியில் சுதந்திரமான தமிழரசு ஒன்று நிறுவப்பட்டதால் வரலாற்றுப் பாரம் பரியங்களைப் பேணவேண்டும் என்ற உணர்வு ஏற்பட அதனால் வையாபாடல் கைலாயமாலை, கோணேசர், கல்வெட்டு போன்ற வரலாற்று நூல்களும், தக்ஷிண கைலாச புராணம் போன்ற சமய வழி நின்ற வரலாற்று நூல்களும் தோன்றின.

வையாபாடல் என்ற நூலை எழுதியவர் வையாபுரி ஐயர் ஆவார்.

'இலங்கை மாநகர் அரசியற்றிடும் அரசர் தன்
குலங்களோடு குடிகள் வந்திடும் முறைநாளே' !

என்று நூலில் குறிப்பிடுவதிலிருந்து இலங்கையின் மன்னர் பரம்பரை பற்றியும், மக்கள் குடியேற்றங்கள் இடம் பெற்றமை பற்றியும் கூறுகின்றது. பௌராணிக மரபிலே யாழ்ப்பாண வரலாற்றைக் கூறும் இந்நூல் வன்னியரின் வரலாற்றுக்கு முக்கியத்துவம் தருகின்றது. முத்துராஜ கவிராஜர் இயற்றிய கைலாயமாலை கைலாயநாதர் கோயிலின் வரலாற்றைத் தெரிவிக்கின்றது. கவிராசர் அல்லது கவிஇராசவரோதயன் என்பவர் எழுதிய கோணேசர் கல்வெட்டு என்னும் நூல் குளக்கோட்டு மன்னனின் கோயில் திருப்பணிகளைப் பற்றிக் கூறுகின்றது. குளக்கோட்டு இராமன் எனப்படும் சோழமன்னன் 'கோணேசர் கோட்டமும், கோபுரமும், மதிலும், மண்டபமும் பாபநாச தீர்த்தமும் அமைத்த வரலாற்றுச் செய்திகளைக் கூறுகின்றது.

ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றில் தனித்துவமான பண்புகளில் ஒன்று தலபுராணங்கள் பற்றியதாகும். தக்ஷிணகைலாச புராணம் திருகோணமலையில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் கோணேசர் பெரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானையும் மாதுமையம்மையாரைப் பற்றியும் கூறுகின்றது. வடமொழி யில் உள்ள மச்சேந்திய புராணத்தை தழுவி இந்நூல் எழுதப்பட்டது. சமய உணர்வு இலக்கியச்சுவை, வரலாற்றுணர்பு போன்ற பல்வேறு அம்சங்களை இந்நூல் தன்னகத்தே கொண்டுள்ளது. இக்காலத்தில் தோன்றிய இன்னொரு தலபுராணம் திருக்கரைசைப் புராணமாகும் மகாவலிக் கங்கைக் கரையில் அமைந்துள்ள கரைசை என்ற இடத்தில் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானைப் புகழ்வதாக இந்நூல் அமை கின்றது.

தமிழ் இலக்கிய வரலாற்றில் பொதுமக்கள் சார்பான இலக்கி யங்கள் தோன்றியது நாயக்கர் காலத்திலேயே இவ்வகையில் ஈழத்து தமிழ் இலக்கியமே முதன்முதலாகப் பொதுமக்கள் சார்பான இலக்கி யத்தைத் தந்தது எனலாம். கதிரைமலைப் பள்ளுப்பிரபந்தமே தமிழில் தோன்றிய முதற்பள்ளுப்பிரபந்தமாகும். இதுவே தமிழ்நாட்டிற் முக் கூடற் பிரபந்தத்திற்கு வழிகாட்டியது எனலாம். பள்ளுஇலக்கிய மரபிற் கேற்ப பள்ளன், மூத்தபள்ளி, இளையபள்ளி, பண்ணையார் ஆகியபாத் திரங்களைக் கொண்டு விளங்குகின்றது. மரபுவழி இலக்கிய அம்சங்க ளோடு நாட்டார் இலக்கிய, இசை நாடகப்பண்புகளையும் இவ்விலக் கியம் கொண்டிருந்தது.

சிலப்பதிகார காப்பியத்தை, அடியொற்றியதாக கண்ணகி வழக் குரை கோவலனார்கதை, சிலம்பு கூறல் என்ற வெவ்வேறு பெயர்களில் சிலம் பின் கதையிலிருந்து சிலவற்றை நீக்கி, சிலவற்றைச் சேர்த்து பொது மக்களுக்கேற்ற வகையில் ஒரு புது இலக்கியமாகச் செய்யப்பட்டுள்ளது. கண்ணகி வழக்குரை என்று கிழக்கு மாகாணத்திலும் கோவலனார்கதை என்று வடமாகாணத்திலும் சிலம்பு கூறல் என்று முல்லைத்தீவு பகுதி யிலும் இவ்விலக்கியம் வழங்கிவருகின்றது.

[ தொடரும் ......

திரு. கி. நடராசா
( அதிபர் )

பாம்பாட்டிக்கு பாம்பிலே சாவு, கள்ளனுக்கு களவிலே சாவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Easy way to Learn English

## PART - 15

1 Underline the correct word

(a) I sent/scent him a bottle of sent/scent

(b) Practice/Practise makes perfect

(c) The wound in his heel/heal will take a long time to heel/heal

(d) It is not right/rite to right/write impolite letters to your Superiors.

(e) The plot/blot of land near the fish market is not an ideal sight/site

(f) He connot read at night because his eye sight/site is poor.

(g) The woman wearing a red saree is a Pedlar. She sells/shell her wears/wares in the Village.

காட்டங்களின் தொகுதி பிறவிச்சூழல் எனப்படும்.

(h) The rich man is quite $\frac{\text{merry}}{\text{marry}}$ because his daughter is going to $\frac{\text{merry}}{\text{marry}}$ a wealthy planter

(i) Bread is made of $\frac{\text{flour}}{\text{floor}}$. A garland is made of $\frac{\text{flowers}}{\text{flour}}$

(j) A knife made of $\frac{\text{steal}}{\text{steel}}$ is sharp.

2 Fill in the blanks in column " A " with one of the following words to get the answers in column " B " ( was — how much — what — do whom — did — what — why )

| " A " | " B " |
|---|---|
| (a) ......... did you say John? | I said we would be late |
| (b) ... ...... you want anything to drink? | Not Just now. Thank you |
| (c) ... ...... they give you any money? | No, they didn't |
| (d) .. does Mohan meet every friday evening? | His sister Leela |
| (e) ............ is Sri Lanka famous for? | Its tea |
| (f) ...... ...... did your father sell his car? | To go for a new one |

S. Thurairajah
( English Tutor )

நம்மையே நமக்களிப்பவர் குரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை மாத வாராந்த நிகழ்வுகள்

**02-04-99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்
அறிமுகவுரை : பண்டிதர் க. முத்துவேலு
சொற்பொழிவு : " ஆர் அளக்க வல்லார் "
வழங்குபவர் : திரு. ச. விநாயகமூர்த்தி
( சிரேஸ்ட போதனாசிரியர் யாழ் பல்கலைக்கழகம் )

---

**09-04-99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்
அறிமுகவுரை : திரு. சி. செ. சோமசுந்தரம்
( ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளர் )
சொற்பொழிவு : " மகான்களும்
மனித வாழ்க்கையும் "
வழங்குபவர் : திரு V. K. பாலசுப்பிரமணியம்
( இளைப்பாறிய ஆசிரியர் பருத்தித்துறை )

---

**16-04-99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்
அறிமுகவுரை : திரு. க. கந்தசாமி
சொற்பொழிவு : " காரிகைக்கு கரம் ஈந்தகந்தன் "
வழங்குபவர் : திருமதி க. ஜெகவதனராஜா
( சச்சிதானந்தா ஆச்சிரமம் கைதடி )

---

**23-04-99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்
அறிமுகவுரை : திரு. சி. நாகலிங்கம்
விடயம் : " பக்திப் பாடல்கள் "
வழங்குபவர் : திருமதி உமாராணி பேரானந்தம்
( இசைக்கலைமணி யா/கலட்டி மெ மி. த க. பாடசாலை)
திருமதி நிரஞ்சனாதேவி கிருபாகரன்
( ஆசிரியர், யா/ இந்து ஆரம்ப பாடசாலை )

---

**30-04-99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

# ஞானச்சுடர் மாத வெளியீடு
# சித்திரை - 1999

வெளியீட்டுரை : வைத்திய கலாநிதி சி. கதிரைவேற்பிள்ளை
( ஆதார வைத்தியசாலை மந்திகை )
மதிப்புரை : திரு. ஆறுதிருமுருகன்
( ஆசிரியர், ஸ்கந்தா, சுன்னாகம் )

யா/வண் நாவலர் மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் போட்டி

முதல் பத்து மலரிலும் ( 1999 ஜனவரி - ஒக்டோபர் ) வெளியிடப்படும் விடயங்களை உள்ளடக்கியதாக வாசகர் இடையே போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறுவோருக்கு வழமைபோல பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டி தொடர்பான விபரங்கள் நவம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டு போட்டி நடாத்தப்பட்டபின் அது பற்றிய முடிவுகள் 2000 ஜனவரி மலரில் வெளியிடப்படும்.

## அன்பான வேண்டுகோள்

மலருக்குப் பொருத்தமான, தரமான சொந்த ஆக்கங்களை இலகு தமிழில் எழுதி எமக்கு அனுப்பி வைக்குமாறு சமயப் பெரியார்களையும், அறிஞர் பெருமக்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மலர்க் குழு :
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை.
செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org